உரிமையிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்பற்றி நீங்கள் கேட்க வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

9—

குடியிருப்புகள்

***6223—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வாடகைக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என முழங்கி, “ஓய்வு நான் அறியாதது, உழைப்பு என்னைவிட்டு நீங்காதது” என வாழும் காலம்வரை மக்கள் நலனுக்காகவே ஓய்வறியாது உழைத்து தெய்வமாகிவிட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் பேராவூரணி தொகுதியில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.

[2017 ஜனவரி 27

திரு. மா. கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் வாழ்வித்துக்கொண்டிருந்த வள்ளல் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எங்களை அரசியலில் வழிநடத்திக்கொண்டிருக்கிற எங்களுடைய கழக பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கோரிக்கையை முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கிற தொகுதி. அந்தத் தொகுதியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பிலே வாடகைக் குடியிருப்புகள் கட்டித்தரப்பட வேண்டும். ஏனென்றால், தமிழகத்திலே குடிசைகளே இல்லாத சூழலை உருவாக்குவோம் என்று சூளுரைத்தார், நம்முடைய வாழ்ந்து மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கனவை நினைவாக்குகின்ற வகையில் எங்கள் பகுதியிலே வாடகைக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்களின் வாயிலாக பணிவோடு கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில், அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் மொத்தம் 1,396 ஆகும். இதில் தற்போது 126 வீடுகள் காலியாகவுள்ளன. குறிப்பாக, பேராவூரணி தொகுதிக்கு அருகில் உள்ள பட்டுக்கோட்டையில் 216 அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இதில், தற்போது 51 வீடுகள் காலியாகவுள்ளன. மேலும் பேராவூரணி, வருவாய் கோட்டாட்சியர் அலுவலக தலைமையிடமாக இல்லை. பேராவூரணி தொகுதி, தேர்வு நிலை பேரூராட்சியாகத்தான் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அரசு ஊழியர்களிடமிருந்து போதிய கேட்பு மனுக்கள் பெறப்பட்டு, அரசு நிலம் ஒதுக்கீடு செய்து, வாரியம் வசம் ஒப்படைத்தால், போதிய நிதியாதாரம் உள்ளபட்சத்தில் அரசு ஊழியர் வாடகை குடியிருப்புகள், தமிழ்நாடு வீட்டு வசதி

2017 ஜனவரி 27]

வாரியத்தின்மூலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

நீச்சல் குளம்

***7095—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான நீச்சல் குளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டத்தில், ஏற்கெனவே இயங்கி வரும் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கத்தில், ஏற்கெனவே இருக்கின்ற நீச்சல் குளத்தை உலகத்தரத்தில், உன்னதமான நிலைக்கு உயர்த்திட மத்திய அரசாங்கத்தின் "விளையாடு பாரதம்" (KHELO INDIA) *என்ற திட்டத்தின்கீழ் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பரிந்துரை ஏற்கப்பட்டவுடன், நீச்சல் குளத்தை தரமுயர்த்த ஆவன செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது பணிவான காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*